1981 பிப்ரவரி 6]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் குறிப்பிடும்போது வெளியிலே சிமெண்ட் விலை 50 ரூபாய்க்கு விற்கப்படுவதாகச் சொன்னார் கள். மாயூரத்தில் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே, அந்த விலையைக் குறைக்க அரசு முன்வருமா ?

(பதில் இல்லை.)

செங்கல்பட்டு மாவட்டத்தில் உப்பு உற்பத்தி.

*வினா எண் 220—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம், கோவளம் போன்ற இடங்களில் அதிகமாக உற்பத்தியாகும் உப்பை பயன்படுத்தும் வகையில் கேளம்பாக்கத்தில் சிறிய உப்பு (Table Salt) தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திரு நாவுக்கரசு : இல்லை.

ஆலங்குளம் தொகுதியில் மின்வெட்டு.

*வினா எண் 201—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் இதர பகுதிகளைவிட மின்சாரவெட்டு மிக அதிகமாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாணபுமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : துணைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் மின்சார வெட்டினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, நஷ்டமடைகிறார்கள். அதைப்போல தொழிற் சாலைகளும் பாதிக்கப்படுகின்றன. அதைப்போக்க அரசு புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைத்துத்தர உத்தேசித்து இருக் கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை துரிதப் படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.